# பொறுப்பு டி.ஜி.பி. பற்றி பேசுவதற்கு எடப்பாடி பழனிச்சாமிக்கு அருகதை கிடையாது!

## புதுக்கோட்டையில் அமைச்சர் எஸ்.ரகுபதி பேட்டி!

புதுக்கோட்டை, நவ.23

**புதுக்கோட்டை மாவட்டம் திருமயம் அருகே லேனா விளக்கில் உள்ள தனியார் பொறியியல் கல்லூரி வளாகத்தில் தெற்கு மாவட்ட திமுக சார்பில் இளைஞர் எழுச்சி நாளை முன்னிட்டு வேலைவாய்ப்பு முகாம் நடைபெற்றது. இந்த முகாமில் தமிழ்நாடு இயற்கை வளங்கள் துறை அமைச்சர் எஸ்.ரகுபதி கலந்து கொண்டு வேலைவாய்ப்பு பெற்ற நபர்களுக்கு பணி ஆணையினை வழங்கினார்.**



இதன் பின்னர் செய்தியாளர்களை சந்தித்த அமைச்சர் எஸ்.ரகுபதி கூறுகையில்:-

பொறுப்புள்ள எதிர்க்கட்சித் தலைவர் எடப்பாடி பழனிச்சாமி விவரங்களை தெரிந்து கொண்டு பேச வேண்டும். யூடியூப்பில் பேசுவதை எல்லாம் செய்திகள் என்று எடுத்துக்கொண்டு ஊடகங்களில் பேசிக் கொண்டிருக்கிறார்.

எடப்பாடி பழனிச்சாமி தொடர்ச்சியாக தான் ஒன்றிய அரசின் சிறந்த சேவகர் என்று நிரூபித்துக் கொண்டு வருகிறார். ஒன்றிய அரசுக்கு எப்போதெல்லாம் ஆபத்து வருகிறதோ அப்போது எல்லாம் குறுக்கே விழுந்து தமிழ்நாடு அரசு மீது தேவையில்லாத குற்றச்சாட்டுகளை சுமத்தி ஒன்றிய பாஜக அரசை காப்பாற்றி வருகிறார். அது டிஜிபி விவகாரத்திலும் நடந்துள்ளது. ஆளுநர் மூலம் அதிகாரத்தை கைப்பற்றலாம் என்று எண்ணிய ஒன்றிய பாஜக அரசு அது டிஜிபி மூலம் நடந்து விடாதா என்று எண்ணினார்கள் ஆனால் டிஜிபி மூலம் நடக்க முடியவில்லை. பொறுப்பு டிஜிபி நியமிக்கப்பட்டுள்ளார் ஏன் நிரந்தர டிஜிபி நியமிக்கப்படவில்லை என்று எடப்பாடி பழனிச்சாமி பேசுகிறார்.

தமிழ்நாட்டிற்கு பொறுப்பு டிஜிபி என்று அறிமுகப்படுத்தியவர்களே அதிமுக தான்.

2011ம் ஆண்டு ராமானுஜத்தை உளவுத்துறை டிஜிபியாகவும் சட்ட ஒழுங்கு பொறுப்பு டிஜிபி ஆகவும் அதிமுக அரசுதான் கொண்டு வந்தது. ராஜேந்திரன் என்பவரையும் பொறுப்பு டிஜிபியாக கொண்டு வந்ததும் அதிமுக தான்.

பொறுப்பு டிஜிபி என்பதை கொண்டு வந்ததே அதிமுக அரசு தான். ஆனால் தற்போது பொறுப்பு டிஜிபி கொண்டு வந்ததை பற்றி பேசி ஒன்றிய அரசின் விசுவாசி அடிமை என்பதை எடப்பாடி பழனிச்சாமி நிரூபித்துக் கொண்டு வருகிறார். பொறுப்பு டிஜிபி பற்றி பேசுவதற்கு எந்தவித அருகதையும் எடப்பாடி பழனிச்சாமிக்கு கிடையாது.

ஒன்றிய பாஜக அரசு தமிழ்நாடு விவகாரத்தில் தாங்கள் விரும்பிய டிஜிபிஜ தான் கொண்டுவர வேண்டும் என்கின்ற ஒரே நோக்கத்தோடு தமிழ்நாடு அரசு யாரையெல்லாம் கொண்டு வர வேண்டும் என்று விரும்பி கேட்டதோ அவர்களை எல்லாம் அவர்கள் தடுத்து வருகிறார்கள்.

டிஜிபி பட்டியலை ஒன்றிய அரசுக்கு அனுப்பி உள்ளோம். மாநில அரசு விருப்பப்படி தான் டிஜிபி நியமனம் இருக்கும். ஆனால் அத்தகைய சூழல் தற்போது இல்லை.

அதிமுக ஆட்சியில் சூரப்பாவை அண்ணா பல்கலைக்கழகத்தின் துணைவேந்தராக நியமித்தார்கள். மோடி அரசு தமிழ்நாட்டில் காவிரி பிரச்சனை இருந்தபோது அதிமுக அரசில் கர்நாடகவை சேர்ந்தவரை தான் துணைவேந்தராக நியமித்தார்கள். அதேபோல் ஒன்றிய பாஜக அரசின் ஆட்களை தான் டிஜிபியாக நியமிக்க வேண்டும் என்று நினைக்கிறார்கள். அது தமிழ்நாட்டில் ஒருபோதும் நடக்காது.

டிஜிபி விவகாரம் ஒரு துறை ரீதியான பிரச்சனை இதை ஒரு விவகாரமாக பார்க்க கூடாது. தமிழ்நாடு அரசை புறக்கணித்து தனக்கு வேண்டிய ஒருவரை டிஜிபியாக ஒன்றிய பாஜக அரசு நினைக்கிறது. இது தமிழ்நாடு மாநில அரசின் உரிமையை பறிக்கும் செயல் , அபகரிக்கும் செயல். நாம் உரிமையை பறிக்கும் செயலை ஒருபோதும் அனுமதிக்க மாட்டோம்.

பொறுப்பு டிஜிபியை வைத்து சட்டம் ஒழுங்கு எப்படி பாதுகாக்க முடியும் என்று எடப்பாடி பழனிச்சாமி கோமாளித்தனமாக கேள்வியும் முன் வைக்கிறார். அவரது ஆட்சியில் தூத்துக்குடி துப்பாக்கி சூட்டை டிவியில் பார்த்து தெரிந்து கொண்டேன் என்று கூறிய நிலையில் தற்பொழுது எடப்பாடி பழனிச்சாமி பொறுப்பு டிஜிபி குறித்து கேட்பது வெட்கக்கேடான செயல். அதிமுக ஆட்சியில் அலங்கோலமாக இருந்த சட்ட ஒழுங்கை திராவிட மாடல் ஆட்சி சிறப்பாக கொண்டு வந்துள்ளது. டிஜிபி விவகாரத்தில் இதுதான் நிலை. நாங்கள் வேண்டுமென்று செய்யவில்லை.

ஆம்ஸ்ட்ராங் கொலை வழக்கை பற்றி எடப்பாடி பழனிச்சாமியும் மற்றவர்களும் கேட்கிறார்கள் சிபிஐ விசாரணைக்கு ஏன் தடை வாங்கினீர்கள் என்று கேட்கிறார்கள்.

ஆம்ஸ்ட்ராங் கொலை வழக்கில் சிபிஐ விசாரணையை விட தமிழ்நாடு காவல்துறை சிறப்பாகவே விசாரிக்கும். இதற்கு பல முன் உதாரணங்கள் இருக்கிறது...

இந்த வழக்கில் 27 குற்றவாளிகள் கைது செய்யப்பட்டுள்ளனர். ஆம்ஸ்ட்ராங் வழக்கை சிபிஐ ஏன் விசாரிக்க கூடாது என்று கேட்கும் எடப்பாடி பழனிச்சாமி 4800 கோடி ரூபாய் நெடுஞ்சாலைத்துறை டெண்டர் முறைகேடு புகாரை ஏன் சிபிஐ விசாரிக்க கூடாது என்று நீதிமன்றத்திற்கு எடப்பாடி பழனிச்சாமி சென்றார். உச்சநீதிமன்றத்திற்கு சென்று ஏன் தடை வாங்கினார். அப்போது சரியாக இல்லை தற்போது சரியாக இருக்கிறதா சிபிஐ?

சிபிஐ விசாரித்தால் தான் நியாயம் கிடைக்கும் தமிழ்நாடு காவல்துறை விசாரித்தால் நியாயம் கிடைக்காது என்பதில்லை.

திராவிட மாடல் அரசின் மீது குற்றம் சுமத்த முடியாததால் கற்பனையான கதைகளை கட்டி கொண்டு அதன்மூலம் அவதூறு கூற முயற்சிக்கிறார் எடப்பாடி பழனிச்சாமி. சிபிஐ கண்டு என்றும் திமுக அரசு அஞ்சியது கிடையாது.

ஆம்ஸ்ட்ராங் வழக்கில் குற்றப் பத்திரிக்கை தாக்கல் செய்யப்பட்டது அதனால்தான் நாங்கள் சிபிஐ விசாரணைக்கு வேண்டாம் என்றோம்.

கண்ணாடியை திருப்பி போட்டால் ஆட்டோ ஓடும் என்று சொல்வதைப் போல கோவை மதுரை மெட்ரோ ரயில் விவகாரத்தில் ஒன்றிய பாஜக அரசு கூறுகிறது. கோவைக்கும் மதுரைக்கும் மெட்ரோ ரயில் கொண்டுவரப்பட வேண்டும். போபால், ஆக்ரா, நாக்பூர் போன்ற நகரங்களுக்கு என்ன சட்டமோ அதே சட்டம் தான் தமிழ்நாட்டிற்கும் இருக்க வேண்டும். அதன் அடிப்படையில் தமிழ்நாட்டிற்கும் மெட்ரோ ரயில் திட்டத்தை தாருங்கள் என்று தான் கேட்கிறோம்.

சென்னையில் சிறப்பாக மெட்ரோ ரயில் திட்டத்தை நிறைவேற்றிக் கொண்டு இருக்கின்றோம். இந்தியாவிலேயே எந்த மாநிலத்திலும் இல்லாத அளவிற்கு சென்னையில் சிறப்பாக நடைபெறுகிறது. எங்களுக்கு எந்த அளவு போட வேண்டும் என்பது சரியாக தெரியும். யாரும் எங்களுக்கு கற்றுக் கொடுக்க வேண்டாம். போலியான காரணங்களை சொல்லி மெட்ரோ திட்டத்தை நிராகரித்திருப்பது ஏற்றுக்கொள்ளத்தக்கது அல்ல.

எஸ் ஐ ஆர் பற்றி திமுக பயப்படவில்லை, திமுக மக்களுடன் உள்ள கட்சி. அவசர கதியில் அதனை செயல்படுத்தக்கூடாது என்றுதான் கூறுகிறோம். பணிசுமையால் பல மாநிலங்களில் பிஎல்ஓக்கள் தற்கொலை செய்து கொண்டுள்ளனர்.

தொடர்ந்து 30 நாள் எஸ்ஐ ஆர் பணி பார்ப்பதால் அலுவலர்கள் மற்றும் பணியாளர்களுக்கு மன அழுத்தம், பணிசுமை ஏற்படுகிறது. எஸ் ஐ ஆர் பணிக்கு பொதிய அவகாசம் தேவை. அவசர கதியில் எஸ்ஐஆர் கொண்டுவரக்கூடாது அதில் நியாயம் கிடைக்காது என்று தான் கூறுகிறோம்.

எஸ் ஐ ஆர் பணியை தேர்தலுக்குப் பிறகு வைத்துக் கொள்ளலாம் இதில் ஏன் அவசரம்.

2024ல் அவர்கள் கொண்டு வந்த வாக்காளர் பட்டியல் தான். அவசரமாக எஸ்ஐ ஆர் கொண்டு வந்தால் தவறு நடக்கும். அதனால் தான் நாங்கள் தற்போது வேண்டாம் என்றும். தேர்தலுக்குப் பிறகு பார்த்துக் கொள்ளலாம் என்பதுதான் நீதிமன்றத்தில் நாங்கள் வைக்கும் வாதம்.

எடப்பாடி பழனிச்சாமி நாங்கள் தான் பிஎல்ஓகளிடமிருந்து படிவத்தை பெற்று செல்வதாக கூறுகிறார். எங்களைப் பொறுத்தவரை ஒரு வாக்காளர் கூட விட்டு விடக்கூடாது. அதனால் அவகாசம் தேவை அதனை ஒத்தி போடுங்கள் என்று கூறுகிறோம்.

ஆளுநர் விவகாரத்தில் மூன்று தான். ஆளுநர் ஒப்புதல் கொடுக்க வேண்டும். அல்லது அதைத் திருப்பி அனுப்ப வேண்டும் அல்லது ஜனாதிபதிக்கு அனுப்ப வேண்டும் இந்த மூன்று வாய்ப்புதான் இருக்கிறது.

வெள்ளை ஏகாதிபத்திய காலத்தில் ஆளுநர்கள் மசோதாவை நிறுத்தி வைப்பதற்கான சூழல் இருந்தது. ஆனால் தற்போது வெள்ளை ஏகாதிபத்தியம் இல்லை ஒருவேளை வெள்ளை ஏகாதிபத்யமாக இந்தியாவை மாற்றி விட்டார்களா என்பது எங்களுக்கு தெரியாது.

தேர்தலுக்கு தேர்தல் நாங்கள் செங்கலை காண்பிக்க வேண்டும் என்பதற்காக அவர்கள் மதுரை எய்ம்ஸ் மருத்துவமனையை தாமதப்படுத்தி வருகின்றனர்.

எங்கள் கூட்டணி பலமாக இருக்கிறது எங்கள் கூட்டணியை விட்டு யாரும் வெளியே செல்ல மாட்டார்கள் என்று தெரிவித்தார்.

இவ்வாறு அமைச்சர் எஸ்.ரகுபதி குறிப்பிட்டார்.



கழகத் தலைவரும், தமிழ்நாடு முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (22.11.2025) சென்னை, அண்ணா அறிவாலயத்தில், சென்னை தென் மேற்கு மாவட்டம், மயிலை கிழக்கு பகுதி கழக இளைஞர் அணி துணை அமைப்பாளர் சுந்தர் ரகு – எஸ். சந்தியா தம்பதியரின் மகனுக்கு “ஸ்டாலின்” என்று பெயர் சூட்டினார்.

### ஆவடிக்கு துணை முதல்வர் வருகை:

# திருவள்ளூர் மத்திய மாவட்டத்திற்கு உட்பட்ட கழக நிர்வாகிகள் - பொதுமக்கள் பெருந்திரளாக கலந்து கொள்வீர்!

## மாவட்ட கழகச் செயலாளர் அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் அறிவிப்பு!

திருவள்ளூர், நவ.23–

திருவள்ளூர் மத்திய மாவட்டச் செயலாளர் – அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

வருகின்ற நவம்பர் 24, 2025 அன்று, காலை 10 மணி அளவில், திருவள்ளூர் மாவட்டம், ஆவடி சட்டமன்றத் தொகுதியில் நடைபெற உள்ள மாபெரும் அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா, துணை முதலமைச்சரும், கழக இளைஞரணி செயலாளருமான அன்பு சகோதரர், இளம் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் தலைமையில், திருவள்ளூர் மாவட்டம் – ஆவடி சட்டமன்றத் தொகுதியில் பிரம்மாண்டமாக நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் திருவள்ளூர் மாவட்டத்தின் வளர்ச்சிக்காக மொத்தம் ரூபாய் 1,460 கோடியே 45 இலட்சத்து 96 ஆயிரத்து 555 மதிப்பிலான நலத்திட்டப் பயன்கள் மற்றும் வளர்ச்சிப் பணிகள் பொதுமக்களுக்கு வழங்கப்படவுள்ளன. இதன் மூலம், 1 லட்சத்து 12 ஆயிரத்து 879 பயனாளிகள் நேரடியாகப் பயன்பெற உள்ளனர்.

**நிறைவுற்ற திட்டங்கள் மற்றும் அடிக்கல் நாட்டுதல்**

மக்கள் பயன்பாட்டிற்காகப் பணிகள் நிறைவுற்ற 374 கட்டிடங்கள் இந்த விழாவில் பொதுமக்களின் பயன்பாட்டிற்காகத் திறந்து வைக்கப்பட உள்ளன. இத்திட்டங்களுக்கான மொத்த மதிப்பு ரூபாய் 322 கோடியே 73 இலட்சத்து 34 ஆயிரத்து 523 ஆகும். இதில் ஊரக வளர்ச்சி, சுகாதாரம், சமூகநீதி, குடிநீர், சாலை, பெண்கள்குழந்தைகள் நலம் மற்றும் வருவாய் உள்ளிட்ட பல துறைகளின் மேம்பாட்டுப் பணிகள் அடங்கும்.



மேலும், திருவள்ளூர் மாவட்டத்தின் எதிர்கால வளர்ச்சியை உறுதி செய்யும் வகையில், 211 புதிய திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டு விழா நடைபெறுகிறது. இதற்கான மொத்த முதலீடு ரூபாய் 137 கோடியே 38 இலட்சத்து 17 ஆயிரத்து 400 ஆகும். இந்த முதலீட்டில் குடிநீர்–வடிகால் பணிகள், ஊரக வளர்ச்சி, சுகாதாரம் மற்றும் சமூகநீதி போன்ற முக்கியத் துறைகள் அடங்கும்.

அதே நேரத்தில், பொதுமக்கள் நலனுக்காக 1 லட்சத்து 12 ஆயிரத்து 294 (1,12,294) பேருக்கு ரூபாய் 1000 கோடியே 34 இலட்சத்து 44 ஆயிரத்து 632 மதிப்பிலான நேரடி நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட உள்ளது.

இதில் குறிப்பாக, வருவாய்த் துறை சார்பில் 37,267 பேருக்கு 689 கோடியே 50 இலட்சம் மதிப்பீட்டில் பட்டா, சமூகப் பாதுகாப்பு ஓய்வூதியம், வருவாய் சான்றிதழ்கள் உள்ளிட்ட பயன்களும், இதர துறைகளின் சார்பில் பெண்கள் நலம், மாணவர் உதவித் திட்டங்கள், வீட்டு வசதி திட்டங்கள், குடிநீர் இணைப்பு, மாற்றுத்திறனாளிகள் நலத்திட்டங்கள், சுகாதாரப் பயன்கள், பொது விநியோகத்துறை நலன்கள் மற்றும் நகராட்சித் திட்டங்கள் உள்ளிட்ட முக்கியப் பயன்கள் வழங்கப்பட உள்ளது.

இந்த மாபெரும் நலத்திட்ட விழா, திருவள்ளூர் மாவட்டத்தின் முன்னேற்றத்திற்கும், மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தவும் மிகப்பெரிய மைல்கல்லாக அமையும் என்பதில் சிறிதும் ஐயமில்லை.

எனவே எதிர்வரும் 24 ஆம் தேதி நடைபெற உள்ள இந்த வரலாற்றுச் சிறப்புமிக்க நிகழ்விற்கு அதேபோல் திருவள்ளூர் மத்திய மாவட்ட திமுக சார்பில் ஆவடி பேருந்து நிலையம் எதிரில் பேரறிஞர் அண்ணா அவர்களின் வெண்கல முழு உருவம் சிலையை மாண்புமிகு தமிழ்நாடு துணை முதல்வர் திருக்கரங்களால் திறந்து வைக்கிறார். மற்றும் திருவள்ளூர் மத்திய மாவட்டம் ஆவடி சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட வார்டு கிளைக் கழகங்களில் இளைஞர் அணி அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் பாக இளைஞர் அணி அமைப்பாளர்கள் அறிமுக கூட்டம் திருவேற்காடு ஜி.பி.என். பேலஸ் மண்டபத்தில் நடைபெறுகிறது இதில் கழக இளைஞரணி செயலாளர் தமிழ்நாடு துணை முதல்வர் கலந்து கொண்டு பல்வேறு ஆலோசனைகளை வழங்கி சிறப்பிக்க உள்ளார்.

எனவே திருவள்ளூர் மாவட்டப் பகுதிப் பொதுமக்களையும், கழக நிர்வாகிகள், திரளாகக் கலந்துகொள்ள வேண்டும் அன்புடன் வரவேற்கிறோம் என மாவட்ட கழக செயலாளர் அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் அறிக்கை வாயிலாக தெரிவித்துக் கொண்டார்.

### நவ. 27 – இளைஞர் எழுச்சி நாளையொட்டி – நாமக்கல் கிழக்கு மாவட்டத்தில்

# பிறக்கும் குழந்தைகளுக்கு தங்க மோதிரம் - 100 நலஉதவி நிகழ்ச்சிகள்!

## கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் எம்.பி. அறிவிப்பு!

நாமக்கல், நவ. 23 -

நவம்பர் 27 இளைஞர் எழுச்சி நாளையொட்டி நாமக்கல் கிழக்கு மாவட்டத்தில் பிறக்கும் குழந்தைகளுக்கு தங்க மோதிரம் வழங்குவது மற்றும் 100 நலத்திட்ட நிகழ்ச்சிகள் நாமக்கல் கிழக்கு மாவட்ட செயற்குழுவில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

நாமக்கல் கிழக்கு மாவட்டக் கழக செயற்குழு கூட்டம் நாமக்கல் மோகனூர் சாலை, முல்லை நகர் கலைஞர் அறிவாலயம் இனமான பேராசிரியர் கூட்டரங்கில் நடைபெற்றது. மாவட்ட அவைத் தலைவர் சி.மணி மாறன் தலைமை தாங்கினார். நாமக்கல் கிழக்கு மாவட்ட அலுவலகத்தில் நடைபெற்றது. நாமக்கல் சட்டமன்ற உறுப்பினர் பெ.இராமலிங்கம், நாமக்கல் மாநகராட்சி மேயர் து.கலாநிதி ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

கூட்டத்தில் நாமக்கல் கிழக்கு மாவட்ட கழகச் செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினரும், நாமக்கல் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கித்தலைவருமான கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார்.

இக்கூட்டத்தில் மாநில மகளிர் தொண்டர் அணி செயலாளர் ராணி, மாவட்ட துணை செயலாளர்கள் நலங்கிள்ளி, ராணி பெரியண்ணன், பொருளாளர் ஏ.கே.பாலசந்திரன், தலைமச் செயற்குழு உறுப்பினர்கள், பொதுக்குழு உறுப்பினர், துணை மேயர் பூபதி, நகர செயலாளர்கள் ராணா ஆனந்த் சிவக்குமார், ஒன்றிய செயலாளர்கள் அசோக்குமார், ராமசுவாமி, நவலடி, பழனிவேல், ஜெகநாதன், பாலசுப்பிரமணி, செந்தில் முருகன், எம்.



பி.கௌதம், ஜெயபிரகாஷ், ஆர்.எம்.துரைசாமி,

பேரூர் செயலாளர்கள் தனபாலன், முருகேசன், செல்லவேல், சுப்பிரமணி, ஜெயக்குமார் பொன்.நல்லதம்பி பழனியாண்டி, அன்பழகன், கண்ணன், ராஜேஷ் மற்றும் சார்பு அணி நிர்வாகிகள் பொன் சித்தார்த், கிருபாகரன், மாவட்ட சார்பு அணி அமைப்பாளர்கள், மகளிர் அணி நிர்வாகிகள், நகர்மன்ற,பேரூர் மன்ற தலைவர்கள் சிறப்பு அழைப்பாளர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

கூட்டத்தில் கழக இளைஞர் அணி செயலாளரும், தமிழ்நாடு துணை முதலமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாள் விழாவை முன்னிட்டு நாமக்கல் கிழக்கு மாவட்டத்தின் சார்பாக நாமக்கல் கிழக்கு மாவட்டம் ஒன்றிய, நகர, பேரூர்களில் உள்ள அரசு மருத்துவமனை மற்றும் ஆரம்ப சுகாதார நிலையங்களில் நவம்பர் 27ம் தேதி அன்று பிறக்கும் அனைத்து குழந்தைகளுக்கு தங்க மோதிரம் அணிவிக்கப்படும்.

ஒன்றிய, நகர, பேரூர் மற்றும் மாவட்ட சார்பு அணிகள் சார்பாக நவம்பர் 27 மற்றும் 28 ஆகிய நாட்களில் ஆதரவற்றோர் இல்லத்திற்கு உணவு வழங்குதல், விளையாட்டு வீரர்களுக்கு விளையாட்டு உபகரணங்கள், ஆரம்ப மற்றும் நடுநிலைப் பள்ளி மாணவ செல்வங்களுக்கு நோட்டு புத்தகம் வழங்குதல், தூய்மை காவலர்களுக்கு மதிய உணவு வழங்குதல், கழக மூத்த முன்னோடிகளுக்கு வேட்டி வழங்குதல், போன்ற 100 இடங்களில் நலத்திட்ட நிகழ்ச்சிகள் மற்றும் கழக கொடி ஏற்றி சர்க்கரை பொங்கல் வழங்குவது உள்ளிட்ட பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது.




திருவள்ளூர் மாவட்டம் திருத்தணி வடக்கு ஒன்றியத்தில் த.மா.கா. வட்டாரத் தலைவர் சக்கரபாணி திருவள்ளூர் மேற்கு மாவட்ட கழகச் செயலாளர் திருத்தணி எஸ்.சந்திரன் எம்.எல்.ஏ முன்னிலையில் ஒன்றிய கழக செயலாளர் ஏ.எல்.விஜயகுமார், ஏற்பாட்டில் கழகத்தில் இணைந்தார். உடன் மாநில இளைஞரணி துணைச் செயலாளர் ஜி.பி.ராஜா, ம.கிரண், ஆர்.ராஜா, எஸ். ரவி, உள்பட ஒன்றிய கழக நிர்வாகிகள் பலர் உள்ளனர்.



தூத்துக்குடி மாவட்டம், அய்யனடைப்பு ஊராட்சியில் புதிதாக கட்டப்பட்டுள்ள 220 அடுக்குமாடிக் குடியிருப்புகளை பயன்பாட்டிற்கு கழக துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி. திறந்து வைத்தார். இதில் அமைச்சர் பெ.கீதா ஜீவன், மாவட்ட ஆட்சியர் இளம் பகவத், சட்டமன்ற உறுப்பினர் எம்.சி.சண்முகையா, மேயர் ஜெகன் பெரியசாமி, ஒன்றியச் செயலாளர் கே.கே.ஆர்.ஜெயக்கொடி மற்றும் பலர் கலந்துகொண்டனர்.

### தமிழ் வளர்ச்சிக் கழகத்தின்

# ‘சொல் புதிது’ எனும் திட்டத்தின் ஏழாவது கூட்டம்!

## முனைவர் ம.இராசேந்திரன் தலைமையில் நடைபெற்றது!

*சென்னை, நவ. 23-*

*தமிழ் வளர்ச்சிக் கழகத்தின் ‘சொல் புதிது’ என்னும் திட்டத்தின் ஏழாவது கூட்டம் தமிழ் வளர்ச்சிக் கழக அலுவலகத்தில் 19.11.2025 முற்பகல் நடைபெற்றது. இக்கூட்டத்திற்குத் தமிழ் வளர்ச்சிக் கழகத்தின் தலைவர் முனைவர் ம. இராசேந்திரன் தலைமை வகித்தார். இக்கூட்டத்தில் பேராசிரியர்கள் வ. ஜெயதேவன், மு. இராமசாமி, ஒப்பிலா மதிவாணன், பாரதிபாலன், சா. சரவணன், நா. சந்திரசேகரன், ஆ. மணவழகன், ம. இளங்கோவன், மற்றும் ராஜ் கண்ணன், மு. முருகேசன், முனைவர் அ. ஜேம்ஸ், ஆகியோர் கலந்துகொண்டனர். இக்கூட்டத்தில் பின்வரும் 30 சொற்கள் முடிவு செய்யப்பெற்றன.*

*ஆங்கிலம்- தமிழ் சொற்கள் விவரம் வருமாறு:-*

*Brownfield project தாளடித் திட்டம், Greenfield project முதலடித் திட்டம், Aironox உடை மிடுக்கி, Aerofoot காற்று நடைக் காலணி, Invisacook மறை அடுகலன், Water walking shoes நீர்மிசைக் காலணி, Grow bag பயிர் வளர்ப்புப் பை, Air taxi Flying taxi வாடகை வானுந்து, Air car - வானுந்து, Zeptosecond - நுண்ணொடி, Wind farm / Wind park காற்றாலைப் பண்ணை/ பூங்கா, Cyber fraudster இணைய மோசடிக்காரர், Global governance புவி ஆளுகை, Rapid Stroke Response Team - பக்கவாத மருத்துவ விரைவுக் குழு, Fast Breeder Test Reactor அணுமின் விரைவாக்க உலை, Intraday trading நாள் பங்கு வணிகம், Combo - சேர்க்கை, OTT இணையப் படத் தளம் (இபத),White collar terrorism அறிவுக் கயவர் பயங்கரவாதம்/வன்முறை, Plastic surgeon மெய்சீர் (அறுவை) மருத்துவர், Deepsea mining ஆழ்கடல் சுரங்கப்பணி, Digital connectivity இணையத் தொடர்பு, Digital infrastructure இணையக் கட்டமைப்பு, Assistive Technology மாற்றுத் திறன் தொழில்நுட்பம், Down Jacket இறகுபொதி மேலுடை, Bomber Jacket கவச மேலுடை, Puffer Jacket புடைப்பு மேலுடை, Varsity Jacket/Letterman Jacket அடையாள மேலுடை, Hoodie Jacket தொப்பி மேலுடை, Legging காலொட்டு உடை*

*இவ்வாறு தமிழ் வளர்ச்சிக் கழகத் தலைவர் முனைவர் ம.இராசேந்திரன் தெரிவித்துள்ளார்.*